பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELA NADU

கலி 19 ஐப்பசி 9 ஜுல்ஹ: 11 இதழ் 255
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-10-77

12 சடலங்கள் மீட்பு! கடும்மழையிலும்தேடுதல்

கம்பளை திங்கள் கடந்த சனிக்கிழமை இரவு கம்பளை, கிக்ஹாபிட்டிய தோட்டத்தில் நிகழ்ந்த பயங்கர மண்சரிவினால் பலியான 27 பேரில் இன்று மாலை வரை 12 பேரின் சடலங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை வரை ஆறு சடலங்களும், இன்று ஆறு சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன.

தொடர்ந்து பெய்யும் கடும் மழையையும் பொருட்படுத்தாமல் பொலிஸ், ராணுவம், பொதுமக்களின் மீட்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், மற்றுமொரு மலைச்சரிவும் இங்கு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சப்படுகிறது.

உயிருடன் புதையுண்டவர்களை மீட்பதற்காக கற்பாறைகளையும் மண்ணையும் அப்புறப்படுத்தும் வேளையில் மற்றுமொரு மண்சரிவு ஏற்படலாமென்று அஞ்சப்படுவதால்; அந்த இடத்திற்கு அருகேயுள்ள குடும்பங்கள் வேறிடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு பெருமழை பெய்துகொண்டிருப்பதால் மீட்பு வேலைகள் பல சந்தர்ப்பங்களில் தடைப்பட்டன.

சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணரத்ன இன்று கண்டி அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு கம்பளை மண்சரிவு நிலைமை பற்றி விரிவாக ஆராய்ந்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான உதவி வழங்கப்பட வேண்டுமென்பது குறித்து அரசாங்க அதிபருடன் அமைச்சர் ஆலோசனை நடத்தியதாக சமூகசேவைகள் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று மாலைவரை மொத்தம் பன்னிரண்டு சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. மழை கடுமையாகப் பெய்வதால் இரவுநேரத்தில் மீட்பு வேலை

(6-ம் பக்கம் பார்க்க)

நாட்டின் பல பகுதிகளில் கடும்மழை; வெள்ளம்!

போக்குவரத்து பாதிப்பு!

கொழும்பு, திங்கள்

நாடு முழுவதும் பெய்துகொண்டிருக்கும் கடும் மழை காரணமாக, பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மலைநாட்டுப் பகுதியில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. பிரதான பாதைகளில் வாகனப் போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டுள்ளன. கொழும்பின் சுற்றுப்புறப் பகுதிகளில் மட்டும் 4,300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகர்ப்புறம் தவிர்ந்த தாழ்ந்த பகுதிகளில், வெள்ளத்தினால் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு, இலவச உணவும் உடையும் வழங்கப்பட்டு வருவதாகவும் சமூகசேவைகள் பகுதி அறிவித்துள்ளது. இவர்களது நாளாந்த உணவுக்காக 21,000 ரூபா செலவிடப்படுகிறது.

நுகேகொடை, வத்தளை, ஹெந்தளை, ஜா-எலைபகுதிகள் முழுவதும் பாதிக்கப்பட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. களனிகங்கையின் நீர்மட்டம் ஐந்து அடிவரை உயர்ந்திருந்து இன்று மாலையில் நாலரை அடியாகக் குறைந்துவிட்டது.

புத்தளத்திலும் சிலாபத்திலும் சில பகுதிகள் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பகுதியில் தொடர்ந்து மழைபெய்கிறது. மலைநாட்டிலும் கடும்மழை பெய்துகொண்டிருக்கிறது. சில இடங்களில் ஏற்பட்ட மண்சரிவுகளினால் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டிலும் கடந்த 5 தினங்களாகக்கடும்மழை பெய்துகொண்டிருக்கிறது.

சென்னையில் 500க்கும் அதிகமான குடிசைகள், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. இதன் எதிரொலியாக 1420 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டன. இவர்களுக்கு இன்று 90,000 உணவுப்பொட்டலங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

வெள்ளச்சேதவிபரங்களின்படி, தமிழ் நாட்டில் 30 பேர் வெள்ளத்துக்குப் பலியாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

'எள்ளு ஏற்றுமதியை தடைசெய்க!'

'சிவா' பிரேரணை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண மாவட்டத்தில் எள்ளிலிருந்து எண்ணை பெறப்படும் குடிசைக் கைத்தொழிலாளருக்கு விமோசனம்விளைக்கும் வகையில் தனியார், எள்ளு விதைகளை ஏற்றுமதிசெய்வதை அரசு தடுக்க வேண்டும் எனக் கோரும் பிரேரணையை தேசிய அரசுப்பேரவையில் கொண்டு வருவதற்கு நல்லூர் எம். பி. திரு. எம். சிவநிதம்பரம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

"எள்ளிலிருந்து எண்ணை பெறப்படும் குடிசைக்கைத்தொழிலாளர், எள்ளு ஏற்றுமதியால் தமது தொழிலை மூடவுள்ளனர். இதற்கு அரசாங்கம், எள்ளுவித்தகளை ஏற்றுமதிசெய்வதை விடுத்து எண்ணெயை ஏற்றுமதிசெய்வதால் எள்ளின் விலையேற்றத்தைத் தடுக்கமுடியுமென்றும் இக்குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நியாயவிலையில் எள்ளு வழங்கவேண்டும்" என்றும் தமது பிரேரணையில் திரு. சிவநிதம்பரம் குறிப்பிட்டுள்ளார். [கெ]

மீன் மழை!

மட்டுவில், திங்கள்

நுணாவில் பகுதியில் இன்று மீன் மழை பெய்தது!

நுணாவில் வயல்பகுதியில் இன்று பெந்த மழையுடன் சிறு மீன்களும் விழுந்தன. இங்குள்ள கோயில் வீதியிலும் மீன்கள் விழுந்து துடிப்பதைப் பலர்கண்டு அதிசயித்தனர்!

அச்சுவேலி ப. நோ. கூ. ச. கொள்ளை

எதிரிகள் பிணை: எழுத்தில் மனுச்செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கொள்ளை வழக்கில், எதிரிகளால் பிணையில் விடுவது தொடர்பாக எதிரிகளின் சட்டத்தரணியும், அரச சட்டத்தரணியும் காரணங்களை எழுத்துமூலம்சத்தியக்கடதாசியுடன் சமர்ப்பிக்குமாறுநேற்று நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் உத்தரவிட்டார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ். மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர்களான நாராயணன் அருமைச்சந்திரன் (29 வயது), கனகராசா ரமணகரன் (16 வயது), தவராஜசிங்கம் உதயணன் (18 வயது) ஆகியோர் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில்சென்றமாதம் 12-ம் திகதி சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி காசாளரிடம் 40 ஆயிரம் ரூபா காசும் காசோலையும் கொள்ளையடித்ததாகவும், பொதுக்கருத்துடன் கொள்ளையடித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். போகநாதன், சட்டத்தரணி கனகம்ஞேரன், சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசா, சட்டத்தரணி கி. சரேந்திரன், சட்டத்தரணி ந. நகுலசிகாமணி ஆகியோர் ஆஜராகினார்கள். அரச சட்டத்தரணி பி. சிவலோகநாதன் அரசதரப்பில் ஆஜராகினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங்

மாத்தறை உயன்வத்த ஸ்ரேடியத்தில் இன்று இழுக்கப்பட்ட 636-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:

1-ம் பரிசு
14 S 0844
ரூ. 100000/-

2-ம் பரிசு
37 D 0465
ரூ. 40000/-

3-ம் பரிசு
21 L 0187
ரூ. 10000/-

(மிகுதி நாளைவரும்)

சட்டத் திருத்தங்கள் மாற்றி அமைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

முன்னாள் நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, நீதி மற்றும் சிவில் சட்டத்துறையில் செய்த மாற்றங்கள் அத்தனையும் மாற்றி அமைக்கப்படுமென்று நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

இன்று நடத்திய பத்திரிகையாளர்கள் மாநாட்டிலேயே நீதியமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

சிவில் சட்டக்கோவையிலும் நீதி நிர்வாகச் சட்டக் கோவையிலும் முன்னர் செய்த மாற்றங்கள் நீக்கப்படுமென்றுதெரிவித்த நீதியமைச்சர் மாஜிஸ்திரேட்நீதிமன்றங்களில்வேலைப் பளுவைக் குறைக்க நடவடிமேற்கொள்ளப் படுமென்றும் கூறினார். (ம)

தெரிவுக்குழுவில் கூட்டணி இடம்பெறும்?

யாழ்ப்பாணம், செவ்

அரசியல் சட்டத்திருத்தம் பற்றிய ஆராய்வுக்கான பேரவைத் தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர்பங்கு பற்ற வேண்டுமென்று கூட்டணியின் நடவடிக்கைக்குழுவிலுள்ள பெரும்பான்மையானவர்கள் விரும்புவதாகத்தெரியவருகிறது. இறுதிமுடிவை எடுப்பதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக்குழு இம்மாதம் 30ம்திகதி கொழும்பில் கூடுகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியல் சட்டமூலம் திருத்தப்படுவதை எதிர்க்கவில்லையென்றும், தெரிவுக்குழுவில்கூட்டணி பங்குபற்றாவிட்டாலும் பிரச்னை, பங்கு பற்றினாலும் பிரச்னையாகவிருப்பதால் நடவடிக்கைக்குழுவே இதற்கான முடிவை எடுக்குமென்றும் கூட்டணியின் பிரமுகர் ஒருவர்

(6-ம். பக்கம் பார்க்க)

புரட்சிக்காரர்களுக்கு இடிஅமின் ஆயுதம்!

கம்பாலா, அக். 24

உகண்டா அதிபர் இடிஅமின், தென்னாபிரிக்கா, பலஸ்தீனம் ஆகிய நாடுகளில் இருக்கும் புரட்சிக்காரர்களுக்கு உகண்டாவில் தயாரிக்கப்படும் நவீன ஆயுதங்களை அளிக்க விருக்கிறார். இந்த ஆயுதத்தை வைத்துக்கொண்டு ஒரு போர்வீரன் 2000 வீரர்களைச் சமாளிக்கமுடியுமாம்.

இந்த ஆயுதம் தாங்கிய போர்ப்படைப் பிரிவொன்றை விரைவில் ரொடீஷியாவுக்கு அனுப்பவிருக்கிறார் என்று கம்பாலா வானொலி அறிவித்தது.

இப்படைப் பிரிவு அங்கு சென்றவுடன், அந்நாட்டுப் பிரதமர் அயன் ஸ்மித்தும், அவரது அமைச்சர்களும் கைது செய்யப்பட்டு உகண்டா கொண்டுவரப்பட்டுக் கம்பாலாவில் போர்க் கைதிகளாக வைக்கப்படுவார்களாம்.

இந்த ஆயுதத்தைப் போர்வீரர்கள் பயன்படுத்திக் கொண்டு ரொடீஷியா, தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம் முதலிய நாடுகளை விடுவிக்கமுடியுமென்று இடிஅமின் தெரிவித்துள்ளார். (கெ)

வரி விளம்பரம்

தேவை

ரிங்கர், லேத்மன், வெல்டர் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7444

எட்டியாந்தோட்டையில் உள்ள K. சிவகுருநாதன் அன் சன்ஸ் நிறுவனத்திற்கு புடவை, பலசரக்கு, இரும்பு வியாபாரக் கணக்கு தமிழில் எழுதுவதில் திறமையான அறிவுள்ள கணக்கு விகிதர் தேவை. அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் நிர்ணயிக்கப்படும். 30-10-77-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ்ற்றன் ஸ்ரோர்ஸ், 82, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு 11. 7479

வகுப்புகள்

யாழ்ப்பாண கல்வி நிலையத்தில் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. 22, ராமைஆச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7491

ஏல விற்பனை

மானிப்பாய் 'வசந்தம்' வே. க. இராசலிங்கம் & சன் அவர்களிடம் 1-1-73தொடக்கம் 31-3-76 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 19-11-1977 சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்.
'இராசகிரி'
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 7436

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இன்று விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ். யாழ். வளாகவிஞ்ஞானபீட மூன்றும் ஆண்டு மாணவர்களுக்கும், மனித பண்பியல்பீட சிறப்புப் பட்டதாரிகளுக்குமான விரிவுரைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இவர்களுக்கு இரண்டுவார விரிவுரைகளின்பின் இறுதிப் பரீட்சை நடைபெறும். (கெ உ)

ஆட்சேபிக்க கோரிக்கை

சுழிபுரம், திங்கள் சுழிபுரம் கிராமசபையின் சோலைவரி உயர்வு முடிவை ஆட்சேபிக்குமாறு சுழிபுரம் சனசமூக நிலைய சமாஜத்தினர் வரியிறுப்பாளர்களைக் கேட்டுள்ளனர். (உ)

மும்மொழித் திட்டம் தமிழ் மொழிக்கு சாவுமணி அடிக்கும்

சுயாட்சிக்கழகம் தீர்மானம்

வண்ணார்பண்ணை, திங்கள் "இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ள மும்மொழித் திட்டம் இலங்கைத் தமிழ் மக்களின் மீது சிங்களத்தைத் திணிக்கும் அபாயத்திட்டமாகும். இது தமிழ் மொழிக்கு சாவு மணியடிப்பதாக அமைகின்றது இது விடயத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி மௌனம் சாதித்தபோதும் இதை மக்களுக்கு எடுத்துக்காட்டி முழுமூச்சாக எதிர்க்கும் பொறுப்பு தமிழர் சுயாட்சிக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழர் சுயாட்சிக் கழக செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்காத காரணத்தால், திரு. நா. வீரசிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விபரம் பின்வருமாறு:

மும்மொழித் திட்டம் இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க உகந்ததென பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறிய கருத்துக்கு ஆதரவு திரட்ட மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்படுகிறது. இத்திட்டம் தமிழ் மக்களின் மொழிப்பிரச்னையின் சவப்பெட்டிக்கு அறையக்கூடிய கடைசி ஆணி போன்றது. தமிழ் இனம் இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

"இத்திட்டம் நாளடைவில் இலங்கை எங்கிலும் சிங்களத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையை உருவாக்குகிறது. இதை எதிர்த்துப் போராட வேண்டிய பொறுப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இருந்தபோதும் இக்கட்சி இது விடயத்தில் மௌனம் சாதித்து வருவது கவலைக்குரியதாகும். அரசியல் நிர்ணய சபையில் யாப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டபோது பகிஷ்கரிப்பதாகக் கூறிய தமிழர் விடுதலைக்கூட்டணி அத்திருத்தத்தை நேரடியாக எதிர்க்காமல் திருத்த மசோதாவில் கலந்துகொள்ளாத போதும் இக்கட்சியில் தலைவர் இத்திருத்த மசோதாவில் ஆதரித்து வாக்களித்ததும் இத்திட்டம் சம்பந்தமான உப குழுவொன்றுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுத்துவருவதும் வேடிக்கையாக அமைந்துள்ளது தமிழ்மக்கள் மத்தியில் ஒரு விதமாகவும் பாராளுமன்றத்தில்வேறு ஒருவிதமாகவும் நடந்துவரும் தமிழர்விடுதலைக்கூட்டணியினர், மும்மொழித் திட்டத்தில் நடந்துகொள்ளும் விதம் தமிழ்மக்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. எனவே இத்திட்டத்தை எதிர்த்து தமிழர் சுயாட்சிக் கழகம் பிரசாரம் செய்யவேண்டும்.

திருகோணமலைப் பிரதேசத்தை சுங்கவரியில்லாத பிரதேசமாக மாற்றி அமைக்க அரசு திட்டம் வகுத்துள்ளது. கிழக்கு மாகாணத்தை தமிழ் மாகாணமாகஇல்லாமல்செய்ய எடுக்கும் நடவடிக்கையில் இது ஒன்றாகும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதும் கிழக்கு மாகாணம் தமிழ் மாகாணமாக இருக்க முடியாது. இது விடயத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியினர் மௌனம் சாதிப்பது தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது விடயத்தை தமிழர் சுயாட்சிக் கழகம் பரிபூரணமாக எதிர்க்க முன்வர வேண்டும். 1965 ம் ஆண்டு முதல் 1970 ம் ஆண்டுவரை தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகியன தேசிய அரசாங்கத்தில் இருந்தபோது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஆபத்தான நடவடிக்கைகளை விட தற்போது எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் தமிழ் இனத்துக்கு மேலும் ஆபத்தை அதிகரிப்பனவாக அமைகின்றன என்றும் கழகம் கருதுகிறது. மற்றும் பல தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. கழகத்தின் புதிய செயலாளர் மேற்படி தீர்மானங்களை முன்மொழிந்து உரையாற்றினர்.

மெய்வல்லுநர் போட்டி: யூனியன் கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், செவ். யாழ். மேற்குப் பிராந்திய மெய்வல்லுனர் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 19 வயது சுவட்டுவிருது, 19 வயது மைதானவிருது, 17 வயது சுவட்டு விருது; மைதானவிருது; 16 வயது மைதான விருதுகளைப் பெற்று சாதனை ஒன்றினை நிலைநாட்டியுள்ளது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி 16 வயது சுவட்டு விருதைப் பெற்றது. அஞ்சலோட்டங்களுக்கான வெற்றிக் கிண்ணத்தையும் யூனியன் கல்லூரியே சுவீகரித்துள்ளது.

இப்போட்டிகளில் காங்கேசன்துறைவட்டுக்கோட்டை மானிப்பாய்த்தொகுதிப் பாடசாலைகள் பங்குபற்றின.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ். மகேந்திரன் 17 வயதுக்குட்பட்ட கோலூன்றிப் பாயும் போட்டியில் 9 அடி, 6 அங்குலம் கோலூன்றிப் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவர் அகில இலங்கைப் பாடசாலைகள் போட்டியிலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் மேற்படி போட்டிகள் நடைபெற்றன. (கெ-உ)

தமிழாராய்ச்சி மகாநாடு

கடந்த 'ஈழநாடு' வாரமலரில் முதலாம்பக்கத்தில் வெளிவந்த 'ஆணைக்குழு நியமிக்க இன்னும் ஏன் தயக்கம்' என்ற செய்தியில் "1973-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாடு" என்று தவறுதலாத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1974-ம் ஆண்டு என்று இருத்திருக்க வேண்டும். (ஆ-ர்)

மின் இணைப்பு நிறுத்தம்

வவனியா, திங்கள் முள்ளியவளைக் கிராமப் பிரதேசத்தில் இயங்கிவந்த மின் இணைப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

அந்த மின் வழங்கும் இயந்திரத்தினால் தொடர்ந்து நட்டம் ஏற்படுவதாகவும் இதுவரை சுமார் 2 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்காகச் செலவுசெய்யும் பணத்தை வேறு பயன் தரும் வழிகளில் செலவு செய்யப் போவதாகவும் முள்ளியவளைக் கிராமசபை விசேட ஆணையாளர் திரு. ப. பரம்சோதி கூறினர். (உ)

கலவரத்தின் பின் மீண்டும் திறக்கப்படும்

வவனியா, திங்கள் கலவரத்தைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த வவனியா புதிய சந்தைக்கட்டிடத்தில் இருந்த வவனியா தெற்கு தமிழ்பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிராமிய வங்கி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

வவனியா தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன் முயற்சியினால் இக்கிராமிய வங்கி மீண்டும் சங்கக்கட்டிடத்திலேயே திறக்கப்பட்டுள்ளது. சங்கத்தலைவர் திரு பெ. அருட்பிரகாசம் இந்த வங்கியைத் திறந்து வைத்தார். (அ)

மிளகாய் உத்தரவாத விலையை குறைப்பதற்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்வாய் மிளகாயின் உத்தரவாத விலையைக் குறைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதனை ஆட்சேபிக்கும் வகையில் திருவையாறு படித்த வாலிபர் திட்ட இளைஞர்கள் ஊர்வலமாக கிளிநொச்சிச் சந்தைக்கு வந்து குறைந்த விலையில் விவசாயிகள் மிளகாய் விற்பனை செய்யக்கூடாதென தடுத்தனர்.

மிளகாய்ச் செய்கையில் நம் நாட்டு விவசாயிகளுக்கு ஏற்படும் செலவையும் கஷ்டத்தையும் அரசாங்கம் உணர்ந்து மிளகாய் இறக்குமதித் திட்டத்தை உடன் கைவிடவேண்டும் என்று இக்கூட்டத்தில் இவ்வாலிபர்கள் குறிப்பிட்டனர்.

இதுபற்றிய ஆட்சேபனைகளை இவர்கள் பிரதமர், விவசாய அமைச்சர், கிளிநொச்சி எம். பி. ஆகியோருக்கும் அனுப்பி வைத்தனர். (கெ-உ)

"கதிரொளி அறிவகம்"

யாழ்ப்பாணம், செவ். அச்சுவேலி வடக்கு சனசமூக நிலையத்தின் "கதிரொளி அறிவகத்" திறப்புவிழா நாளைபகல் திரு சண். ஜெயசந்திரபோஸ் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக தொழில் அதிபர், திரு. க. கனகராசா கலந்துகொள்வார்.

மங்கள விளக்கேற்றி நூலகத்தை, கோப்பாய் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுபிள்ளை திறந்து வைப்பார்.

"மக்களை சான்றோராக்குவது தாயா? தந்தையா?" என்ற வழக்காடு மன்றமும், "மனிதனின் வாழ்க்கையை பண்படுத்துவதின் முக்கிய பங்கு தாய்க்கா? தாரத்துக்கா?" என்ற பட்டிமன்றமும் "எதுவேண்டும்?" என்ற கவியரங்கமும்; திருக்குறள் மனனப்போட்டி; இசைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெறும். (கெ-உ)

சாலைகச்சேரி

நகரசுத்தி தொழிலாளர் கோரிக்கைக்கு இணக்கம்

கொடிகாமம், திங்கள் சாலைகச்சேரி நகரசுத்தித் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள நகரசபையின் விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராஜா இணக்கம் தெரிவித்துள்ளார்.

தமக்கு கோல உடை தைத்துத் தருமாறும் தம்வகிப்பிடங்களுக்கு மின்சார வசதி தருமாறும் இத் தொழிலாளர்கள் கிளைக் காரியதரிசி திரு. மு. கோணமலை ஊடாக விசேட ஆணையாளரிடம் சமர்ப்பித்திருந்தனர்.

அடுத்தாண்டு நிதி ஒதுக்கீட்டில் இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக உறுதியளிக்கப்பட்டது. (உ)

வலி கிழக்கு வட பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி.

பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் நிரந்தர பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகள்		வேதனம்
1. பொதுமுகாமையாளர் தரம் 111	ரூபா 340/- 15 10/20 5 ரூபா 590/-	
2. கடன் சந்தைப்படுத்தல் உற்பத்திமுகாமையாளர் தரம் 111	ரூபா 300/- 12-50 10/15 5 500/-	

வயது:- 23க்கும் 50க்கும் இடைப்பட்டவராக இருத்தல்வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. குறைந்தவது 2 வருடமாவது யாழ். மாவட்டத்திற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 10-11-77-ந் திகதியன்றோ அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள், விண்ணப்பப்பத்திரம் யாவையும் ரூபா 1/- தபால் கட்டணை மூலமோ, பணமாகவோ செலுத்தி, கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்துமூலமோ அன்றேல் நேரிலோ வந்து பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடிதஉறை அனுப்பப்படல் வேண்டும்.

ஒப்பம்
கா. மாணிக்கவாசகர்,
தலைவர்.

வலிகாமம் கிழக்கு வட பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
இராஜவீதி, அச்சுவேலி,
21-10-77. 7184

இந்திரா காந்தி கைது விவகாரத்தில் அரசு குளறுபடி!

ஜனதா பொதுச்செயலாளர் தவறை ஒப்புக்கொள்கிறார்

புதுடில்லி, அக். 24

முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியை ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதுசெய்தவிவகாரத்தில் அரசு குளறுபடி செய்துவிட்டது என்று ஜனதா கட்சிப் பொதுச்செயலாளர் திரு. மதுமாலி அரசின் தவறை ஒப்புக்கொண்டார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பிரம்மானந்தரெட்டிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இத்தவறை ஒப்புக்கொண்டார்.

அரசு குளறுபடி செய்த போதிலும் திருமதி இந்திரா காந்தி இழைத்த குற்றங்கள் நற்செயல்களாகவோ அதர்மம் தர்மமாகவோ மாறிவிட மாட்டாது என்றும் அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் மீட்க காங்கிரஸ் கட்சி ஜனதாக்கட்சியுடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும் ஜனதாக்கட்சி பொதுக்காரியதரிசி காங்கிரஸ் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ்கட்சியில் உள்ள சுயநலக்கும்பலை வெளியேற்றி ஜனநாயகநெறிப்படி கட்சியை இயங்கவைத்து நாட்டில் ஜனநாயகம் செழித்தோங்கஜனதா கட்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (இ)



ஊர்காவற்றுறைத்தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே மகேந்திரன் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்தபின், நீதிமன்றமுன்றலில் வைத்துத் திருகோணமலை முன்னாள் எம்.பி. திரு. பா. நேமிநாதனாலும், தமது நண்பர்களாலும் வரவேற்கப்பட்டார்.

பூட்டோ விடுதலை கோரிய 55 பேர் கைது!

கராச்சி, அக். 24

கொலைக் குற்றச்சாட்டு மீது கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவை விடுதலை செய்யுமாறு கோரி கராச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்த 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 21 பேர் நீதிமன்றம் முன்நிறுத்தப்பட்டு அவர்களுக்கு தலா 15 கசையடியும் ஒருவருட கடுழியச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்திராகாந்தி தமிழ்நாடு வருகிறார்

சென்னை, அக். 24

திருமதி இந்திராகாந்தி இம்மாதம் 29-ம் திகதி தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனாரின் அழைப்பை ஏற்றே திருமதி காந்தி சென்னை வருகிறார்.

சென்னையில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் திருமதி காந்தி மதுரை, சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டங்களில் உரையாற்றுவார்.

தேர்தலில் தோல்வியுற்றபின் அரசியலில் சிலகாலம் ஒதுங்கியிருந்த பின்னர் மீண்டும் அரசியலில் பிரவேசித்த காந்தி முதல்தடவையாக சென்னை வருகிறார். (இ)

24 'சப்பல்' பஸ்கள் கொழும்பு திரும்பின

நெல்லியடி, திங்கள்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிலிருந்து இதுவரை 24 'சப்பல்' பஸ் வண்டிகள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மற்றும் 16 'சப்பல்' பஸ்களையும், ஓடக்கூடிய நிலைக்குத் திருத்தம் செய்வதில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இ. போ. ச. மேலிடத்தின் பணிப்புரையின் பேரில் பருத்தித்துறை டிப்போவிலுள்ள 'சப்பல்' பஸ் உதிரிப் பாகங்கள் யாவும் மொறட்டுவையில் உள்ள இ. போ. ச. மத்திய பொறியியல் தளத்திற்கு அனுப்பப்படவிருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் சாலை விநியோக அதிகாரி திரு. என். சிவராசா, சாலை பிரதம பண்டசாலைப் பொறுப்பாளர் திரு. ஏ. மரியதாஸ் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

தற்போது 33 பஸ் வண்டிகளே பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ச அ)

தென் ஆபிரிக்காவை அழிக்க அமெரிக்கா, ரஷ்யா முயற்சி

பிரதமர் வோஸ்டர் குற்றச்சாட்டு

ஜொஹனஸ்பேக். அக். 24

சோவியத் யூனியனும் அமெரிக்காவும் தென்ஆபிரிக்காவை அழிக்கமுயற்சி செய்துவருகிறது என்று தென்ஆபிரிக்கப் பிரதமர் திரு. ஜோன்வோஸ்டர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா படைகள் மூலம் தென்ஆபிரிக்காவை அளிக்க முயற்சித்து வரும்வேளையில் அமெரிக்கா பொருளாதாரத் துறையில் அழிவை ஏற்படுத்த முயன்றுவருகிறது என்றும் திரு. வோஸ்டர் தெரிவித்தார்.

தென்ஆபிரிக்காவில் முதலீடு செய்துள்ள அமெரிக்க நிறுவனங்களின் உள்நாட்டுக் கொள்கைகளைமாற்றி அமைக்குமாறு திரு. ஜிம்மிகார்ட்டர் நிர்வாகம் அந்த நிறுவனங்களைப் பணித்துள்ளது என்றும் திரு. வோஸ்டர் தெரிவித்துள்ளார். (இ)

அகதிகளுக்கு உதவி

நீர்வேலி, திங்கள்

நீர்வேலி செந்தமிழ் நாடக மன்றத்தினர் நாடக விழா மூலம் சேர்ந்த ஐந்நூறு ரூபாவுக்கு அச்சுவேலி அகதிகள் முகாமில் உள்ள அகதிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கினர். (உ)

உணவுப்பண்டங்கள் விலைகுறைப்பு

வவனியாவில்

வவனியா, திங்கள்

வவனியா நகரசபைக்குட்பட்ட பேக்கரிச் சொந்தக்காரர்களையும் ஹோட்டல் உரிமையாளர்களையும் கொண்ட மாநாடொன்றை வவனியா அரசாங்க அதிபர் கூட்டி உணவுப் பண்டங்களின் விலைகள்பற்றி ஆராய்ந்தார்.

வவனியா கச்சேரியில் நடைபெற்ற இம்மாநாட்டில் பான், பணிஸ் உட்படச் சகல மாப்பண்டங்களினதும் விலையைக் குறைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி பண்டங்களின் விலைகளை உடன் அமுல் நடத்தும்படி பேக்கரி, ஹோட்டல், தேநீர்க் கடை உரிமையாளர்களுக்கு விலை விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது இவ்விலைப்பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக எல்லா நிலையங்களிலும் வைக்கப்படும். (அ)

அனுராதபுரம்--முல்லைத்தீவு நேரடிபஸ் சேவை

விரைவில் ஆரம்பிக்கப்படும்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவிலிருந்து அநுராதபுரத்திற்கு ஒரு புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. மேலதிக பஸ்கள் கிடைத்ததும், இச்சேவை ஆரம்பமாகும்.

முல்லைத்தீவுப் பிரயாணிகள் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கலந்துரையாடலின் போது அநுராதபுரம் இ.போ.ச.கட்டுப்பாட்டு அதிகாரி திரு. டொன் வீரக்கோன் மேற்கண்ட உறுதியை அளித்தார்.

முல்லைத்தீவுப் பட்டணசபை மண்டபத்தில் நடந்த இக்கலந்துரையாடலில், அநுராதபுரம் இ.போ.ச.உதவியாளர் திரு. இ.இராஜேந்திரா, முல்லைத்தீவு இ.போ.ச.அத்தியட்சகர் திரு. வே.கிறிஸ்கந்தராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

உள்ளூர் சேவைகளில் பிரயாணிகளுக்கு இருந்த அசௌகரியத்தைச் சுட்டிக் காட்டிய போது, இதனைத்திருத்தம் செய்யும் வகையில், மேலதிக பஸ்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகப் பொறுப்பதிகாரிகள் உறுதியளித்தனர்.

முல்லைத்தீவுப்பகுதியில் முத்தையன்கட்டு இருந்தபோதிலும், முல்லைத்தீவு டிப்போ தவிர்ந்த ஏனைய டிப்போக்களினால் இப்பகுதிக்கு பஸ்சேவை நடத்தப்படுகிறது. என்று சுட்டிக்காட்டியபோது, வெகுவிரைவில் முல்லைத்தீவு-முத்தையன்கட்டு பஸ்சேவை ஆரம்பிக்கப்படும் எனப் பொறுப்பதிகாரிகள் உறுதியளித்தனர்.

முள்ளியவளையிலிருந்து-புதுக்குடியிருப்பிற்கு ஒரு புதிய சேவை மேலதிகபஸ் கிடைத்தவுடன் நடத்துவதாக உறுதியளிக்கப்பட்டது.

கொக்கிளாய் - முல்லைத்தீவு பாதையில் ஒரேயொரு பஸ் மாத்திரம் செயலாற்றப்படுவதால் பிரயாணிகள் பெரும் சிரமத்தை அடைகின்றனர் என்றும் ஆனால் இரண்டு பஸ்கள் அப்பாதையில் சேவைக்கு அனுமதிக்கப்பட்டும் அவை சேவையில் ஈடுபடவில்லை என்று சுட்டிக்காட்டிய போது வெகுவிரைவில் இரண்டு பஸ்களை அப்பாதையில் சேவைக்குவிட ஒழுங்குசெய்வதாகவும் உறுதிகூறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளம் ஊடாக முல்லைத்தீவிற்கு காலை 7மணிக்குப் புறப்பட்டு மீண்டும் முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் ஊடக யாழ்ப்பாணத்திற்கு பிற்பகல் 1-30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்தடையும் சேவை இ.போ.ச. சேவை ஆரம்பத்திலிருந்து செயலாற்றப்பட்டும் தற்போது 3,4, வருடங்களாக அச்சேவைஇடம் பெறுவதில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டு இதையும் தாங்கள் ஆராய்வதாகக் கூறினார்கள். (க-அ)

அகதிகளை வேறிடத்திற்கு மாற்றக் கோரிக்கை!

வவனியா, திங்கள்

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் தொடர்ந்து அகதிகள் இருப்பதால் வகுப்புக்களை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டிடங்களில் அகதிகள் இருப்பதால் வகுப்புகள் மரங்களுக்குக் கீழே நடைபெற்று வந்ததென்றும், மழைகாலம் ஆரம்பித்துவிட்டதால் தொடர்ந்தும் வகுப்புக்களை நடத்தமுடியவில்லை என்றும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

அகதிகளை வேறு இடத்திற்கு மாற்றும்படி பெற்றோரும், ஆசிரியர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாடசாலையில் அகதிகள் இருந்த காரணத்தினால் கடந்த மாதம் இப்பாடசாலை மூடப்பட்டிருந்தது. (க)

பொதுநூலகத்தில் இராணுவம்

வவனியா, திங்கள்

வவனியா பொஜன நூல் நிலையம் கடந்த இரண்டு மாத காலமாக மூடப்பட்ட நிலையில் இருக்கிறது. இக்கட்டிடம் இராணுவத்தினரால் பாவிக்கப்பட்டு வருகிறது.

'சிங்களத்தையும் தமிழையும் கட்டாயபாடமாக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், செவ்.

"நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் கட்டாயபாடமாக்கும்மாறு இம்மாத இறுதியில் பிரதமர் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்திக்கும் அகில இலங்கைச் சிங்களவர்-தமிழர் நட்புறவுச் சங்கத்தினர் வலியுறுத்துவார்கள்.

பிரதமரின் அழைப்பின் பேரில் இச்சங்கத்தூதுகோஷ்டியினர் சங்க அமைப்பாளர் திரு. ரி. கணபதிப்பிள்ளை தலைமையில் பிரதமரைச் சந்திப்பார்கள்.

இத்தூதுக்குழுவில், திரு. எம். எல். டபிள்யூ, விமலகீர்த்தி, ஜனாப் பி. எம். எம். இஸ்மாயில் திரு. வி. சிதம்பரநாதன் ஆகியோரும் இடம்பெறுவர்.

அராலி, கச்சாய், செம்மணி, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் உடனடியாக உப்பளங்கள் ஆரம்பிக்குமாறும், யாழ். பொம்மைவெளி முஸ்லிம் குடியேற்றத்திட்டத்தை அபிவிருத்தி செய்யுமாறும் யாழ். ஆஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்குமாறும், இக்கோஷ்டியினர் பிரதமரிடம் கோருவார்கள். (க.அ)

மானிப்பாயில் கொடி விற்பனையில் 2065 ரூபா

யாழ்ப்பாணம், செவ்.

அகதிகள் புனர்வாழ்விற்காக மானிப்பாய் தொகுதியில் கொடி விற்பனைமூலம் சேர்க்கப்பட்ட 2065 ரூபா 33 சதத்தை, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. மு. பேராயிரவர், மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கத்திடம் கையளித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில், அதிபர் திருமதி சச்சிதானந்தம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

புனர்வாழ்வுச் சபைமானிப்பாய் கோவிற்பற்றுக் கிளை அமைப்பாளர் திரு. சி. க. தம்பிரான் கொடி விற்பனை மூலம் கிடைத்த பணத்தின் விபரத்தைத் தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் திரட்டிய 1001 ரூபா உட்பட மொத்தம் 2065 ரூபா 33 சதம் மானிப்பாய் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. (க-அ)

கருணை உள்ளம் கொண்ட சிங்கள அதிகாரி குடும்பம்

பண்ணை முகாமில் எம்பிலிப்பிட்டியாவைச் சேர்ந்த கே. பெருமாள் என்பவரை சந்தித்தேன். இவருக்கு 9 பிள்ளைகள். வாடகை வீட்டில் வசித்துவந்தார்கள். கலவரம் ஆரம்பமானதும் இவரின் வீட்டை எரித்து விட்டார்கள்.

இராணுவத்தினர் இவர்களைக் காப்பாற்றி, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். அங்கிருந்து வெள்ளவத்தை மூகாமிற்குச்சென்று, இங்கு வந்துள்ளார்கள். இவருடைய மூத்தபிள்ளைகள் இரண்டும் வேலை பார்க்கிறார்கள்.

இவருக்கு இந்தியாவில் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். கோரவா என்ற இடத்தில் றப்பர் தோட்டத்தில் சுப்பையா என்பவர் இருக்கின்றார். இவர் கடிதமும் எழுதியிருக்கிறார். இவர்கள் எல்லாரும் இந்தியா போகவே விரும்புகிறார்கள். போகும்போது தமது பிள்ளைகளையும் கூட்டிச்செல்லப்போவதாகவும் பெருமாள் கூறினார்.

இங்கு காணி கிடைத்தால், விவசாயம் செய்யலாமென்றும் கூறினார். தொழில் செய்யக்கூடிய நல்ல உடற்பலமுள்ளவர் இவர்.

களுபோவலையைச் சேர்ந்த கே. சுப்பையா என்பவர் 2ம் குறுக்குத்தெருவில் வேலைபார்த்துவந்தார். வேலைக்கு வந்ததும் திரும்ப வீட்டிற்குப் போக முடியவில்லை.

'எதற்காக வீட்டிற்குப்போகவில்லை?' என்றுகேட்டேன்.

'பஸ்ஸில் தமிழர்களை இறக்கி அடித்தார்கள்?'

'அப்ப என்ன செய்தீர்கள்?'

'அதிகாலை 107ம் நம்பர் பஸ்ஸில் போனேன்,

'வீட்டில் என்ன நடந்தது?'

'வீடு உடைக்கப்பட்டிருந்தது.'

'வீட்டில் யார் இருந்தார்கள்?'

'வீட்டில்எவருமில்லை. என்ன நடந்ததென்றுதெரியவில்லை.'

'என்ன செய்தீர்கள்?'

பொலிஸில் போய் தெரிவித்தேன்.'

'அவர்கள் உதவி செய்தார்களா?'

'வீட்டில் உள்ளவர்களைத் தேடிப்பார்ப்பதா எங்கள் வேலை என்று கூறி அனுப்பிவிட்டார்கள்.''

'பின் என்ன செய்தீர்கள்?'

'என் மனைவி 3 நாள் ஒருபறங்கி வீட்டில் தங்கியிருந்ததாகவும் அதன் பின் ஒரு முகாமில் கொண்டுபோய் விடப்பட்டதாகவும் அறிந்தேன்.''

''முகாமிற்கு போனீர்களா?''

''ஒவ்வொரு முகாமாகப் போய்த்தேடிப் பார்த்து கடைசியில் கண்டுபிடித்தேன்

''உங்கள் சொந்த ஊர்?''

பூண்டுலோயாப் பகுதியில் உள்ள கொத்மலை. நாங்கள் இறங்கைப்பிரஜைகள்.

மீண்டும்களுபோவிலை போக விரும்புகிறீர்களா?

அங்கு போக விருப்பமில்லை. இங்கு ஏதாவது வேலை கிடைத்தால் நல்லது.

அதிகாரி முகாமில் உள்ளவரும் மீண்டும் தாங்கள்வாழ்ந்துவந்த இடங்களுக்குச்செல்ல விரும்பவில்லை. அதனால்தான் இங்கு ஒரு காணி பெற்றுவிவசாயம் செய்யவிரும்புகின்றார்கள்.

பண்ணை முகாமிற்கு மானவர் பிரதிநிதிகள் கோஷ்டியொன்று வந்து அதிகாரிகளுடன் கலந்துரையாடி, அவர்கள் கஷ்டநஷ்டங்களை நேரில் ஆராய்ந்தது.

இக்கோஷ்டியில் சிங்கள, தமிழ் மாணவர்கள் இடம் பெற்றிருந்தனர். வண. பிதா சரிவானந்தா, இந்த மாணவர் கோஷ்டியினர் பண்ணை முகாமிற்கு வருவதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். இது ஒரு நல்லெண்ணத் தூது கோஷ்டியாகவே அமைந்திருந்தது.

இக்கோஷ்டியில் சகல கட்சியைச் சேர்ந்த மாணவர்களும் இடம்பெற்றிருந்தனர். இவர்களின் முக்கிய குறிக்கோள் அகதிகளை மீண்டும் அவர்கள் வசித்துவந்த இடத்திற்கு அழைத்துச் செல்வதாகத்தான் இருந்தது. தாங்கள் தருந்த பாதுகாப்பு அளிப்பதாகவும் உறுதியளித்தனர்.

இக்கலவரம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? உண்மையில் சிங்கள-தமிழ் மக்களுக்கிடையில் இருந்த பிரச்னையா? இயல்பாக ஏற்பட்ட பகைமனப்பான்மையா? கொள்ளை, வழிப்பறி போன்ற எண்ணங்களா? என்பதை இக்கோஷ்டியினர் துருவித் துருவி ஆராய்ந்தனர்.

'நிலைமை சீராகிவிட்டது. மீண்டும் வந்து வாழுங்கள்' என இவர்கள் விட்ட அழைப்பை அகதிகள் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

'எங்களுக்கு வரவிருப்பமில்லை, அங்கு வந்து இனிமேல் வாழமுடியாது; வரமுடியாத நிலையில் இருக்கின்றோம்' என அகதிகள் தெரிவித்தனர்.

சிங்களவர்களில் ஒருசிலர் தான் இந்தக் கலவரத்தில் ஈடுபட்டார்கள். மற்றும் பெரும்பாலான சிங்களவர்கள் நல்லவர்கள். மனிதாபிமானம் உள்ளவர்கள் என்றும் அகதிகள் அக்கோஷ்டியினரிடம் தெரிவித்தனர்.

அகதிகள் முகாமில் ஒரு சந்திப்பு:

கா. யோகநாதன்

நல்ல மனம் கொண்ட சிங்களவர்கள், அகதிகள் சிலருக்கு உதவப்போய் அவர்களுக்கே ஆபத்து ஏற்பட்டதாகவும் அகதிகள் தெரிவித்தனர்.

''எங்களுக்குபிரிவினைஎண்ணமும் கிடையாது; நாங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்கவுமில்லை. ஆனால் அரசியல் சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டோம்.'' என்று அக்கோஷ்டியினர் கேட்ட கேள்விகளுக்கு அகதிகள் பதிலளித்தனர்.

இக்கோஷ்டியைச் சேர்ந்த தமிழ் மாணவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். அவர் பல இடங்களில் தொழிற்சங்க அமைப்பின் மூலம் தமிழ்த் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் ஏற்பாற்றப்பட்டுள்ளார்கள் எனச் சுட்டிக்காட்டினார்.

வெள்ளவத்தை தெரவு ஆலையிலும், அரசாங்க அச்சகத்திலும் பல தமிழ்த் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு வேலைத்தலத்தில் எவ்வித கஷ்டமும் ஏற்படவில்லை. அவர்கள் இங்கு அகதிகளாக வரவுமில்லை. தொடர்ந்து அங்ருதான் வேலைசெய்கின்றார்கள். சிங்களத் தொழிலாளர்கள் அவர்களுக்கும் பாதுகாப்பு அளித்தனர் என்று தூதுகோஷ்டியில் வந்த மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

தூதுகோஷ்டியினர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் எவரும் மீண்டும் தங்கள் இடத்திற்குச் செல்ல மறுத்துவிட்டார்கள்.

சிங்களவர்கள் என்றதும் அவர்கள் தமிழர்களுக்கு விரோதிகள் என்று எண்ணிவிடக் கூடாது. எத்தனையோ சிங்களவர்கள் தங்கள் உயிரைக்கூட பணயம் வைத்து தமிழர்களைக் காப்பாற்றி அனுப்பிவைத்துள்ளார்கள். எத்தனையோ தமிழர்களை தங்கள் வீட்டில் வைத்துப் பாதுகாத்துள்ளனர்.

அநுராதபுரத்தில் பாதிக்கப்பட்ட ஒரு தமிழ் ஊழியர், கலவரம் உச்சக்கட்டத்திலிருந்த நேரத்தில் அடுத்த வீட்டிலுள்ள சிங்களவரிடம் வேறு வழியின்றி 20 தங்கப்பவுண் நகைகளை ஒப்படைத்துவிட்டு வந்தார். இத்தமிழ்க் குடும்பத்தை இரண்டு நாட்கள் அச்சிங்களக் குடும்பத்தினர்தான் பாதுகாத்து அதன்பின் அனுராதபுரம் கச்சேரியில்கொண்டு போய்ச் சேர்த்தார்கள். ஒரு மாதத்தின் பின், நிலைமை சீரானதும் இந்தத் தமிழ்ஊழியர் அனுராதபுரத்திற்குசென்றபோது. அச்சிங்கள ஊழியர் அவரை வரவேற்று பாதுகாத்து வைத்திருந்த 20 தங்கப் பவுண் நகைகளையும் ஒப்படைத்தார். அதுமட்டுமல்ல, அந்த ஒருமாத காலமும் தமிழ் ஊழியர் வீட்டிலுள்ள தளபாடங்களையும் பாதுகாத்தார். இதனை அந்த தமிழ் ஊழியரே என்னிடம் தெரிவித்தார்.

ஒரு அரசாங்க ஊழியர் கூறிய மற்ற ஒரு சம்பவம் நினைவு வருகிறது. கொழும்பு அகதிகள் முகாமில், சிங்கள உயர் அதிகாரி தமது மனைவியுடன் தினமும் சென்று அகதிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்து வந்தார். ஒரு தினம் நிறைமாதக் கர்ப்பிணி பெண்ஒருவரி வேதனையால்துடிதுடித்துக் கொண்டிருந்தார். கலவரம் நடந்து கொண்டிருந்த நேரம். ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியாத நிலைமை. வேதனைப்படும் இந்தமிழ்ப் பெண், அந்தச் சிங்கள அதிகாரி மனைவியின் கண்ணில் பட்டுவிட்டார். உடனடியாக அவர் அருகில் சென்று அந்தத் தமிழ்ப் பெண்ணின் நிலைமையை உணர்ந்து தனது காரிலேயே ஒரு தனிப்பட்ட வைத்திய நிபுணரிடம் அழைத்துச் சென்றார். டாக்டரிடம் காட்டியபின் அத்தமிழ்ப் பெண்ணை தங்கள் வீட்டிலேயே தங்கியிருக்கும்படி கேட்டார். ஆனால் அந்தத்தமிழ்ப் பெண் தான் அகதிகள் முகாமிற்கு செல்லப் போவதாகக் கூறியதால் அவரை மீண்டும் அகதிகள் முகாமில் கொண்டுபோய் சேர்த்துவிட்டார்.

இப்படியாக இலைமறைகாய்யோல் எத்தனையோ மனிதாபிமானம் கொண்ட சிங்களவர்கள் கலவர நேரத்தில் தமிழர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். இதேபோன்று இங்கு வசித்த சிங்களக் குடும்பங்களையும் எத்தனையோ தமிழர்கள் காப்பாற்றி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திருக்கின்றார்கள்.

பண்ணைமுகாமிற்குநேரிவே கிறிஸ்தவமிஷன் ஒன்று கோய்பைகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. ரோட்டரிச் சங்கத்தினரும் கோப்பை, சவுக்காரம் அன்பளிப்பாகவழங்கினார்கள். ஆனால் அகதிகளில் சிலர் இவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். இதனால் இப்போது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அவசிய தேவை ஏற்படும் போதுதான் கோப்பை,சோப், உடைகள் வழங்கப்படுகிறது.

முகாமிலுள்ள 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குப் பல ஸ்தாபனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

சவரிக்காரக் கம்பெனி, அச்சகங்கள், பதிப்பகங்கள், விளையாட்டுப் பொருட்கள் உற்பத்திச்சாலை ஆகியவற்றில் இவர்கள் சேர்க்கப்பட்டு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

சில குடும்பங்களுக்கு சைவமன்றத்துடன் தொடர்புகள் பெரியார்கள், உதவிசெய்து அவர்களை தனியார் காணிகளில் குடியேற்றுவதற்கான ஒழுங்கைச் செய்துள்ளார்கள்.

நுககொடையைச் சேர்ந்த ஜே. ஹரி என்பவரைச் சந்தித்தேன். இவர் 7 வருடங்களாக அங்கு வாழ்ந்து வந்தவர்.

என்ன நடந்தது என்றுகேட்டேன்,

18ம் திகதி காலை 8 மணிக்கு ஒரு கோஷ்டியினர் வந்து பெரிய கல்லை எடுத்து என் தலையில்அடித்தார்கள் இதனால் காயம் ஏற்பட்டது என்றார்.

வீட்டிலிருந்த மற்றவர்கள் என்ன செய்தார்கள்?

200 பேர் ஒரேயடியாகவந்ததால் அவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்.

பின் என்ன நடந்தது.

சில மணிநேரத்தின் பின் எனக்கு மயக்கமாக வந்தது. அயலிலுள்ள சில சிங்கள நண்பர்கள் என்னை களுபோவலை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். அங்குள்ளவர்களிடம் தமிழர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்று சிலர் பயமுறுத்தியதால் நான்வெளியேற்றப்பட்டேன்?

பின் எங்கு போனீர்கள்?

நேரேவீட்டிற்குப் போனேன் அன்றும் மறுநாளும் ஊரடங்குச்சட்டம். நான் வீட்டிலிருந்தேன். திங்கள் இரவு என் வீட்டை எரிக்கப்போகிறார்கள் என்று அறிந்தேன்.

பின் என்ன செய்தீர்கள்?

பகல் 12 மணிக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டரைச் சந்தித்து

(5ம் பக்கம் பார்க்க)

நெற்பயிரைப் பாதிக்கும் எல்லாப் பூச்சிப் புழுக்களையும் கட்டுப்படுத்த

RIO (Jaffna)
Daily 4 Shows
GOD FORGIVES I DON'T

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2-30 7-00
ஜெய்சங்கர் - சாவித்திரி
தாய்க்கு ஒரு பிள்ளை

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
SECRET FOREST OF AFRICA
(Scope Color)

மனோஹரா எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

கிவலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ காலை 7-00 மணிக்கு காட்சி ஆரம்பமாகும். காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
(யாழ். நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வின்ஸர் சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

சாந்தி யாழ். நகர் போன்: 7642
A Grand Release!
தினசரி 10-30, 2 30, 4-45, 7-00, 9-30
'FIVE CRAZY BOYS'
(Color)

புலோலி இனிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 4-30, 7-00
DARING DOZEN

மூன்றாவது வெற்றி வாரம்!
ராஜா- தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
யாழ்நகர்
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)

ரஷ்யா பயணம்

திருநெல்வேலி கிழக்கு-சட்டநாதர் வீதியைச் சேர்ந்த செல்வன் சி. ரோஜன் ரவீந்திரா லுமும்பா பல்கலைக்கழகத்தின் கணிதத்துறையில் புலமைப்பரிசில் பெற்று ரஷ்யா பயணமானார். இவர் யாழ். சென். ஜோன்ஸ், யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

கருணை உள்ளம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என் நிலைமையைச் சொன்னேன். அவர் நேரமில்லை என்றார். எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்றேன். நீர்தான் உம்மைப் பாதுகாக்க வேண்டும் என இன்ஸ்பெக்டர் கூறினார்.

பின் என்ன நடந்தது?

லொறியில் வீட்டிலுள்ள சாமான்களை ஏற்றினேன். சில சாமான்களை கொள்ளையடித்து விட்டார்கள்.

எவ்வளவு சேதம் ஏற்பட்டது?

சுமார் 25,000 ரூபாவரை சேதம் ஏற்பட்டுள்ளது.

எப்படி இங்கு வந்தீர்கள்?

என்னை இராணுவத்தினர் கொழும்பு முகாமிற்கு கூட்டிச் சென்றார்கள். அங்கிருந்து இங்கு வந்தேன்.

திரும்பி நுகேகொடைக்குப் போக விரும்பவில்லையா? இப்பவும் அங்கு சில சில சம்பவங்கள் நடப்பதாக அறிகிறேன். எனக்கு வயதுபோன காலம். இங்கு இருந்துவிட்டால் நல்லது.

காணி கிடைத்தால் விவசாயம் செய்வீர்களா?

அது பழக்கமில்லை. கால் நடை, கோழிப்பண்ணை நடத்த அனுபவமுண்டு. காணி கிடைத்தால் கோழிப்பண்ணை நடத்த முடிவு செய்திருக்கின்றேன்.

அகதிகள் முகாமில் உள்ள எல்லாரும், விவசாயம் செய்யக்கூடியவர்களல்ல. சிலர் தொழில் செய்யக்கூடியவர்கள். மற்றும் சிலர் சாரதிகளாக இருக்கிறார்கள். சிலர் கூலிவேலை செய்யக்கூடியவர்கள். சிலர் வியாபாரம் செய்து பழகியவர்கள். ஒவ்வொருவருடைய விருப்பத்தையும் கேட்டறிந்து அவர்களுக்குத் தொழில வாய்ப்பு பெற்றுக் கொடுக்க வேண்டியது புனர்வாழ்வுச்சபையின் பொறுப்பாகும்.

"ஆன்மீக வளர்ச்சிக்கு

நவராத்திரி வழிபாடு அவசியம்"

யாழ்ப்பாணம், செவ்.

'துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி முறையே இரியா சக்தி, இச்சா சக்தி, ஞானசக்தியைக் குறிப்பவர்கள் இவர்களை விசேஷமாக வழிபடும் நாட்கள் நவராத்திரி நாட்களாகும்' என்று சிவானந்த குருகுல அதிபர் பிரமஸ்ரீ கி. சுப்ரமண்யசாஸ்திரிகள் சிவானந்த குருகுல மாணவர் சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ஒவ்வொரு சக்தியின் அருளைப் பெற உற்சாகசக்தி, பிரபுசக்தி, மந்திரசக்தி வேண்டும்.

ஒருவருஷம் இந்த சக்தி வழிபாடு அவசியம் ஒரு வருஷம் செய்யும் விரத பூஜா பலன் ஒரு வருஷகாலம் நீடிக்கும் பின் அடுத்தவருஷம் பூஜை செய்தால் தொடர்ந்து பலன் கிடைக்கும். ஆன்மீக வளர்ச்சிக்கு வருஷாவருஷம் நவராத்திரி வழிபாடு மிகவும் முக்கியம் என்றார்.

சரஸ்வதி பூஜையுடன் சிவானந்த குருகுலத்தில் 'சிவானந்த குலகுல மாணவர்சங்கம்' நிர்வாகஸ்தர் பிரமஸ்ரீ பாலசுப்பிரமணியஐயர் தலைமையில் உதயமாயிற்று.

பின்வருவோர் முதல் ஆண்டு நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சு. பாலகிருஷ்ணன், காரியதரிசி: நா. பாலேந்திரசர்மா, பொருளாளர்: ம. ஸ்ரீரங்கநாதசர்மா, நிர்வாகசபை அங்கத்தவர்களாக ஷண்முகதாசும், விவேகானந்தனும் தெரிவாகினர். (உ)

'கலைமகள்விழா கலைவளர்ச்சிக்கு உதவும்'

யாழ்ப்பாணம், செவ்.

கலைகளைத் தெய்வமாகக் கருதும் நாம், கலைகளுக்கெல்லாம் தெய்வமாக விளங்கும் கலைமகளுக்கு விழா எடுப்பதன் மூலம் கலைகளின் வளர்ச்சிக்குப் பேருதவிபுரிகின்றோம்.'

இவ்வாறு யாழ். சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலக ஊழியர்களின் கலைமகள் விழாவில்கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் 'இந்து சாதனம்' பத்திராதிபர் திரு. நம். சிவப்பிரகாசம் கூறினார்.

அவர் தொடர்ந்துரையாற்றுகையில், 'சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கத் திணைக்களங்களில் இவ்வித விழாக்களை நடாத்த முடியாத சூழ்நிலை இருந்தது ஆனால் இன்று நிலைமைமாறி எல்லா இடங்களிலும் கொண்டாடப்படுகின்ற நல்லசூழ்நிலையைக் காணக்கூடியதாயுள்ளது மலைமகளாக-அலைமகளாக-கலைமகளாக நாம் வணங்கும் சக்தி ஒன்றே. சக்தியானவள் ஒன்பது நாட்கள் மகாநோன்பு இருந்து, விஜயதசமி அன்று வெற்றித்திருமகளாக விளங்கினாள்' என்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்துப்பேசிய விழாச்செயல் அதிபர் பத்ம. மகேந்திரதாசன் பேசுகையில், இந்தக் காலகட்டத்திற்கு இத்தகைய விழாக்கள் அத்தியாவசியமானவை. ஏனெனில் ஆன்மீகத்துறையே மனிதனைப் புனிதனாக்குகின்றதென்றும் தாம் செய்யும் தொழிலை தெய்வமாக கருதிச் செய்யும் ஒவ்வொருவரும் தெய்வத்திற்கும் சக்திக்கும் அன்பர்களாகவே கருதப்படுவர் என்றார். (கா-உ)

'எங்கெங்கு காணிலும் சக்தியடா'

யாழ்ப்பாணம், செவ்.

'உலகத்தின் இயக்கங்களுக்குக் காரணம் சக்தியாகும். சக்தி தன்ஆற்றலினாலேயே அண்டசராசரங்கள் எல்லாவற்றையும் தொழில்படுத்துவது மாத்திரமன்றி நிலைநிறுத்துவதற்கும் ஏதுவாகும். அச்சக்தி கோடானுகோடி அண்டங்களில் நீக்கமற விரவித்திருக்கின்றன. ஆகவேதான் கவிஞரும் 'எங்கெங்கு காணிலும் சக்தியடா' என்றார்' என்று புங்குடுதீவு கலையொளி நாடக மன்றம் நடாத்திய சரஸ்வதி பூஜைவிழாவில் கலைச்செல்வன் சிவானந்தன் தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'சக்தி அநாதியானது அருள் மயமானது. எனவே தான் அநாதியான சக்தியை நாம் ஆதிபராசக்தியாக வழிபடுகின்றோம். அவள் மூவர்க்கு முதற்பொருளாகவும், முத்தொழில் புரிபவனுக்கு வித்தாகவும்; நாவிற்கும் மனதிற்கும் பேரறிவாகி இருப்பதோடு தேவர், நாகர் யாவர்க்கும் அன்னையாக விளங்குகின்றார்.' என்றார்.

விழாவில் யாழ். மாவட்ட சன சமூக நிலையச் செயலாளர் திரு. சே சண்முகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (கெ-உ)

குருநகரில் கலைமகள் விழா

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். குருநகர் சென். ரோக் சனசமூக நிலைய மாதர் கழக கைப்பணி நிலைய மாணவிகள் கலைமகள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சென். ரோக் சனசமூக நிலைய பாலர் பாடசாலை மாணவ, மாணவிகள் உட்பட நிலைய நாடக மன்ற உறுப்பினர்கள், நிலைய அங்கத்தினர்கள் யாவரும் கலந்துகொண்டனர்.

மில்க்வைற் தொழிலதிபரின் பணையபிவிருத்திப் பணியை ஆசீர்வதித்த பண்டிதமணி கி.கணபதிப்பிள்ளை, தொழிலதிபர் வெளியிட்ட "பனைவளம்" என்னும் நூற்பிரதியை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதைப் படத்தில்காண்க.

மணிவாக்கு

பெட்டியில் உள்ள நீத வானை விட மனிதமனத்துக்குள்ளிருக்கும் நீதவான் மிகவும் பயபக்திக்குரியவரி.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
The Eelanaadu

பெண்களுக்கு வேலைவாய்ப்பு

பல கொண்டக்டர்களாகப் பெண்களையும் தெரிவு செய்யப் போவதாக சமீபத்தில் செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்திலும் பெண்களைச் சேர்த்துக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

காரியாலய 'பியூன்' வேலைக்கும் பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்களாம்.

கொழும்பு நகரில் கார்களை நிறுத்துபவர்கள் அதிக நேரம் தாமதித்தால் கட்டணம் வசூலிப்பதற்கு பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பொலீஸ் சேவையில் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

குமாஸ்தா வேலையிலிருந்து நிர்வாக சேவை வரை பெண்கள் பணியாற்றுகின்றனர்.

அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர். அவர்களுடைய திறமையை அறிந்துகொண்டதால்தான் மேலும் பல துறைகளிலும் அவர்களுடைய சேவையை பெறுவதற்கு யோசனை செய்யப்பட்டுள்ளது.

நமது பெண்கள் எவருக்கும் சளைத்தவர்களல்லர் என்பதை அவர்கள் பலதுறைகளிலும் நிரூபித்துள்ளனர்.

பெண்களின் திறமையை நாட்டுக்குப் பயன்படுத்த வேண்டியது அவசியம்.

ஆனால் ஆண்கள் பலர் வேலையில்லாமல் திரிகின்றனர். தகுதியுக் திறமையும் உள்ள இளைஞர்கள் மட்டுமல்ல மணமாகிக் குழந்தைகளுள்ளவர்கள் கூடப் பலர் வேலையின்றி அல்லல்படுகின்றனர்.

புதிய புதிய துறைகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கு முன்னர் வேலையில்லாதிருக்கும் ஆண்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியம்.

ஜப்பான் நாட்டில் எல்லாப் பெண்களுமே உத்தியோகத்தை நம்பி வாழவில்லை.

வீட்டில் ஓய்வான நேரங்களில் ஏதாவதொரு கைத்தொழிலில் ஈடுபடுவார்கள்

இதேபோன்று நமதுநாட்டிலும் கைத்தொழில் திட்டங்கள் தொடங்கப்பட்டால் பலவீடுகளிலுள்ள குடும்பப் பெண்கள் வருமானம் பெறுவதற்கு வழி பிறக்கும்.

அரசாங்கம் மட்டுமல்லாது தனியார் துறையினரும் வீட்டிலுள்ள பெண்கள் வருமானம் பெறக்கூடிய [illegible] கைத்தொழில் [illegible] ஆரம்பிக்கலாம்.

[illegible] நாட்டில் சிவகாசி போன்ற இடத்தில் தீப்பெட்டி உற்பத்தி குடிசைக் கைத்தொழிலாக நடைபெறுகின்றது. கைத்தறி நெசவிலும் பல வீடுகளிலுள்ள பெண்களுக்கு வருமானம் கிடைக்கிறது.

பெரிய பெரிய தொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சிறுகைத் தொழில்களையும் ஆரம்பிப்பது பலவிதத்திலும் பயன் தருவதாகும்.

'உலகுக்கு கிறிஸ்துவை அறிவியுங்கள்'

யாழ்ப்பாணம். செவ்.

"உலகிற்கு கிறிஸ்துவை அறிவியுங்கள், சகல இன மக்களும் கிறிஸ்துவை அறிந்து தம் வாழ்வில் ஆறுதல் பெற அவர்களுக்கு நற்செய்தியை தெரியப்படுத்துங்கள். கிறிஸ்துவை உலகுக்கு தம் வாழ்வின் மூலம் தெரியப்படுத்தும் கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ளது"

இவ்வாறு அருட்திரு. செல்வராசா அடிகள் அகில உலக மறைபரப்பு ஞாயிறை ஒட்டி யாழ். புனித மரியாள் ஆலயத்தில் திருஉரை நிகழ்த்துகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"பரிசுத்த பாப்பரசர் மறைபரப்பு ஞாயிறையொட்டி விடுத்துள்ள விசேட செய்தியில் உலகில்நாஸ்தீகத்தைஎவ்வளவு வேகமாக பரப்ப முயல்கின்றார்களோ அவ்வளவு வேகமாக மக்களுடைய மனதில் ஆண்டவனைப்பற்றிய சிந்தனையும் ஆண்டவனை அறியும் ஆவலும் வளர்ந்துவருகிறது என்றும் இறைவன் அறியத்துடிக்கும் மக்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தி விரைந்து அறிவிக்கப்படவேண்டுமென்றும் கூறியுள்ளார். எனவே உலகிலுள்ள சகல இன மக்களுக்கும் கிறிஸ்துவை தெரியப்படுத்துங்கள். மறைபரப்பல் என்றால் மதமாற்றம் அல்ல. கிறிஸ்துவின் அன்பை கிறிஸ்துவின் போதனைகளை அறியப்படுத்துவதே இதன்மூலம் மக்களுடைய மனதுக்கு ஆறுதல் அமைதி ஏற்பட வழிபிறக்கும்.

கிறிஸ்தவரி எப்படி வாழ்கின்றான் பிறரிடத்தில் எப்படி நடந்துகொள்கின்றான் என்பதைப் பொறுத்தே உலகமானது கிறிஸ்துவை அறிய முயலும். எனவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகுக்கு ஒளியாக - வழியாக - உயிராகத் திகழவேண்டும்.

ஏழைகளுக்கு ஆண்டவர் பெயரால் கொடுக்கப்படும் நன்கொடைகளுக்கும் கிறிஸ்துவின் திருமறை பரப்ப அளிக்கப்படும் காணிக்கைகளுக்கும் நீங்கள் எந்த அளவினால் அளக்கின்றீர்களோ அதைப்போல இரண்டு மடங்காக இறைவன் உங்களுக்கு திருப்பி அளிப்பார். (கி,தி)

சிங்கப்பூரில் இன்னிசை விரிவுரை

யாழ்ப்பாணம், செவ்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன பிரசாந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரியஸ்வாமிகள் தற்போது சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து இன்னிசை விரிவுரைகள் ஆற்றிவருகிறார் (அ)

...

இன்று சரசாலையில் காமேஸ்வரி விழா

மட்டுவில், திங்கள்

சரசாலை இலந்தைத்திடல் காளியம்மன் ஆலயத்தில் நாளை காமேஸ்வரி விழா நடைபெறவிருக்கிறது.

இவ்விழா தென்மராட்சியில் இவ்வாலயத்தில்மட்டுமே கடந்த பத்தாண்டுகளாக பிரம்மஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்களால் நடத்தப்பட்டுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

...

விவசாயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செவ்வாய்

ஊர்காவற்றுறைத் தொகுதி கமத்தொழில் திணைக்களப் பகுதியினர் 26ந் திகதி நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் 27ந் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலத்திலும் விவசாய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை அப்பகுதி விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர் திரு. சிவக்கொழுந்து இளம் விவசாயக் கழகங்களுடன் இணைந்து செய்துள்ளார்.

கருத்தரங்கில் வனபரிபாலன பகுதியினர் தென்னை விருத்திச்சபையினர் விவசாய விரிவாக்கப்பகுதியினர் கலந்து கொள்வர்.

உவரைத்தாங்கும் பயிர்களையும் நோய்அடக்கும் முறை மரநடுகை என்பன பற்றிய கருத்துரைகள் வழங்கப்படும். (கெ-உ)

12 சடலங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இன்று நடைபெறவாட்டாதென்று தெரியவருகிறது.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றைய குடும்பங்களுக்கு பத்திரமான இடங்களில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இலவச உணவும் உடையும் இன்று வழங்கப்பட்டன.

கம்பளை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. டயிள்யு பி பி. தஸநாயகிகாதிலை மைனயநேரில் கவனித்து வருகின்றார்.

தெரிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவித்தார்.

கடந்தவாரம், பேரவையில் தெரிவுக்குழு நியமிப்பதற்கான பிரேரணையொன்றை உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் ஆர். பிரேமதாசா கொண்டுவந்தபோது, சியாரிசுக்குழுவில் கூட்டணி அங்கம் வகிப்பதா? இல்லையா? என்பதை முடிவெடுக்க கூட்டணி 10நாள் அவகாசம்கோரியது தெரிந்ததே. (கெ)

மூதாட்டியின் உயிரை குப்பிவிளக்கு பறித்தது

மாவிட்டபுரம், திங்கள்

பார்வை குறைந்த வயோதிப மாது ஒருவர் குப்பிவிளக்குடன் தடுக்கி விழுந்த சமயம் உடலில் தீப்பற்றி பரிதாபகரமாக மாண்டார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த கந்தையா பெண் அன்னமுத்து என்னும் வயோதிபமாதே இவ்வாறு மரணமானார்.

தெல்லிப்பழைப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்திய சமயம் "சம்பவதினம் வீட்டில் எவருமில்லாது போகவே வீட்டில் விளக்குகளைக் கொளுத்திவைப்பதற்காக குப்பி விளக்குடன் எழுந்து நடந்து சென்ற காலமானவர், அவ்விளக்குடன் தவறி விழ்ந்த சமயம் குப்பி விளக்குச் சிதறி அவரது உடலில் தீப்பற்றியதாகவும், கூக்குரல் கேட்டுக் கூடிய அயலவர்கள் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோதும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லையென்றும் சாட்சியங்களின்மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிசார் விசாரணைக்கான ஒழுங்குகளைக் கவனித்தனர். [உ]

எதிரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரிகளான அருமைச்சந்திரன், உதயன் ஆகியோர் வேட்டியும் ஷேர்ட்டும் அணிந்தும், ரமணுகரன் வெள்ளை அரைக்கால்சட்டையும்,பச்சை நிற முழுக்கைச் ஷேர்ட்டும் அணிந்து நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்கள்.

குற்றச்சாட்டுகளுக்கு எதிரிகளிடம் குற்றவாளியா? சுற்றவாளியா? எனக் கேட்கப்பட்டபோது, சுற்றவாளி எனத் தனித்தனியே பதிலளித்தனர்.

எதிரிகளை பிணையில் விடுமாறு, சட்டத்தரணி எஸ். யோகநாதன் விண்ணப்பித்தபோது அரசசட்டத்தரணி பி. சிவலோகநாதன் அதனை ஆட்சேபித்து அவர்களை பிணையில் விடக்கூடாது எனத் தெரிவித்தார்.

ரசாயண பரிசோதகர் அறிக்கை, தயாராகஇல்லையென்றும், அது கூடியகெதியில் கிடைக்குமென்றும் அரச சட்டத்தரணி பி. சிவலோகநாதன் கூறினார்.

நீதிபதி விசாரணைக்கு தேதி குறிக்காமல், அடுத்த மாதம் 8ம் தேதி இவ்வழக்கு கூப்பிடப்படுமென்றும், அன்று பிணைக்கான காரணங்களை இருதரப்பினரும் எழுத்துமூலம் சமர்ப்பிக்கவேண்டுமென்றும், உத்தரவிட்டார். எதிரிகள் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் விசாரணையைப் பார்ப்பதற்காக இளைஞர்கள் காணப்பட்டனர்.

இவ்வழக்கில் 137 பக்கங்களைக்கொண்ட குற்றச்சாட்டுபத்திரங்களும், சாட்சியங்களின் பிரதிகளும் சேர்த்து சிறைச்சாலையில் வைத்து எதிரிகளுக்கு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் துப்பாக்கிகள் உட்பட 37 தடயப் பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சாட்கிள் பட்டியலில் 44 பேர் இடம்பெற்றுள்ளனர். (க)

மின்சாரத்துக்குப் பலி!

மட்டுவில், திங்கள்

சைக்கிளில் போய்க்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரக்கம்பி அறுந்து விழுந்தால் மின்சாரம் தாக்கி மரணமானார்.

நுணாவில் சந்தியில் இச்சம்பவம் நடந்தது. கதிரவேலு சோணேஸ்வரன் என்ற 16 வயது இளைஞர் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார். நுணாவில் சந்தியில் தென்னை மரம் ஒன்று முறிந்துமின்சாரக் கம்பியின் மீது விழுந்தது. அதனால் அறுபட்ட மின்வயரின் ஒரு பகுதி வாலிபனின் உடலில் பட்டு அவரைச் சுற்றிக்கொண்டது. மின்சாரத்தைத் தடைசெய்து இளைஞன் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்போகப்பட்டார். அவர் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. மரணவிசாரணையில் இந்த விபரங்கள்வெளியாகின. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கந்தசாமி மரண விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். இருவர் சாட்சியமளித்தனர்.

புதிய நிர்வாகம்

சங்கானை, திங்கள்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை புதியநிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது புதிய சபையின் தலைவராக ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ். பிராந்தியத் தலைவரான திரு. சு. கந்தையா நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடும் நடப்பும்

ஈழத்தின் முதுபெரும் நாதஸ்வர வித்துவானும், முதன்முதலில் தங்க நாயனம் பெற்றவருமான வண்ணார்பண்ணை திரு. வைரவநாதனின் அன்பு மனைவியார் திருமதி மனோன்மணி நேற்றுக் காலை திடீரெனக் காலமானார் என்ற செய்தி ஈழத்து இசையாளர் உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இராம-லெட்சுமணர் போல் சகோதரபாசத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய வைரவநாதன் சகோதரர்களில் இளையவரான திரு. சின்னராசா சமீபத்தில்தான் மறைந்தார். திரு. வைரவநாதனின் ஒரு பேரன் சமீபத்திய கலவரத்தில் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். இப்போது அவருக்குப் பெரும் துணையாக இருந்த அவரது மனைவியாரும் மறைந்துவிட்டார்.

'சோதனை மேல் சோதனை போதுமடா; வேதனைதான் மிகுதி' என்ற கவியரசரின் பாடலைத்தான் பாடத் தோன்றுகின்றது.

திரு. வைரவநாதனின் எண்பதாண்டு நிறைவை வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் ஒரு விழாவாக எடுத்துக் கௌரவித்துப் பொன்னாடை போர்த்திப் பண முடிப்பும் வழங்கி அந்த விழாவில் அம்மையாரும் கலந்துகொண்டு சிறப்பித்தார் இன்று காலை அவரது இறுதிச் சடங்குகள் நடைபெறவிருக்கின்றன.

பிறப்பவர் எல்லோரும் இறந்துதானாகவேண்டும். இந்த நியதியை மாற்றியமைத்துவிடுவதற்கு மனிதர்களால் முடியாது

இப்படி ஆறுதல் கொள்வதைவிட வேறு வழியேது?

∴ ∴ ∴

நாடு முழுவதிலும் இப்போது பலத்த மழையும், அதைத் தொடர்ந்து வெள்ள அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. தென்பகுதியில் ஆறுகள், நதிகள் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியிருக்கின்றன.

1957ம் ஆண்டு பெருவெள்ளம் ஏற்பட்டது. 1967ம் ஆண்டிலும் ஏற்பட்டது. இப்போது 1977ம் ஆண்டிலும் வெள்ளம் ஏற்படும்தானென்று ஒரு நண்பர் சொல்கிறார்.

கம்பளையில் நிகழ்ந்த மண்சரிவில் தோட்டத் தொழிலாளர் சிலரின் குடும்பங்கள் அநியாயமாக மாண்டுபோயின.

∴ ∴ ∴

'மணிக்கொடி' என்ற பெயரில் சிறுவனாக இருந்தபோதே தமது சுயமுயற்சியால் ஒரு சஞ்சிகையை நடத்திய "இணுவை மாறன்" என்ற புனைபெயரி கொண்ட இணுவிலைச் சேர்ந்த திரு. இ. இரத்தினசபாபதி இப்போது ஒரு லண்டன் வாசி.

ஆனாலும் ஈழத்து அரசியலிலும், இலக்கிய உலகிலும் அவருக்கு என்றுமே அக்கறை உண்டு. மூன்று தினங்களுக்கு முன் அவர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். அவரி இங்கு வருவதற்கு முன்னரே 'லண்டன் முரசு' செப்டம்பர் மாத இதழில் அவரது புகைப்படத்தையும், ஈழமாணவர் பொது மன்றத்தில் அவர் நிகழ்த்திய பேச்சின் சுருக்கத்தையும் பார்த்தேன்.

பொருளாதாரத்தில் தமிழ் மக்கள் முன்னேறவேண்டும் என்பதே திரு. இரத்தினசபாபதியின் கனவாக இருக்கின்றது.

பொருளாதாரத்தில் பட்டம் பெற்றுள்ள அவரின் கனவு நிறைவேறவேண்டும்.

பொருளாதார முன்னேற்றத்துக்கான வழிவகைகளைக் காணாமல் எடுக்கும் எந்த முயற்சியினாலும் பயன் கிடைக்கமாட்டாதென்று அவர் கூறுகிறார்.

— ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'சமநாடு' லிமிட்டெட் இதாபனத்தாரால் வரழ்ப்பாணம் கிவன்கோவில் மேலவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka